விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியம் - 2022

# 1 நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிய மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1994 மார்ச் 9 ஆந் திகதிய விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்தின் உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள்

அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்க இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 விடயத்தை வலியுறுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 1.10 இன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு கொவிசெத லொத்தர் வருமானத்திலிருந்து 10 சதவீதம் அளவானவை 1995 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை தேசிய லொத்தர் சபையினால் பொதுத் திறைசேரியின் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட முழு மொத்தம் ரூபா 6,367,303,383 ஆக இருந்த போதிலும் நம்பிக்கை உறுதிப்பத்திரத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிதியத்திற்கு 28 ஆண்டுகள் காலத்தின் போது விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்தது ரூபா 955,605,390 தொகை மாத்திரமாகும். | தேசிய லொத்தர் சபையினால் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பொதுத் திறைசேரியில் திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்ட கொவிசெத லொத்தர் வருமானத்தில் 1995 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரைக்கும் நிதியத்திற்கு பணம் கிடைத்திருக்காததுடன் 2008 ஆம் ஆண்டின் பின்னர் இறுதியாக 2021 ஆம் ஆண்டிலேயே பணம் கிடைத்துள்ளது. நிதியத்தினால் பல தடவைகள் நிதி வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தும் உரிய பணம் கிடைக்கவில்லை. இறுதியாக 2023 ஆம் ஆண்டின் போதும் பணத்தை வேண்டி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 250 மில்லியன் பணம் வழங்கப்பட்டுள்ளது. | கொவிசெத லொத்தர் வருமானத்தை உச்ச அளவு வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

### 1.5.2 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 இன் 9 ஆம் பந்தியின் பிரகாரம் 3 மாதங்களுக்கு குறைந்த காலத்தில் முதிர்ச்சியடைகின்ற சந்தர்ப்பத்தின் போது ஒரு முதலீடானது காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளாக தகமை பெறுகின்ற போதிலும் 3 மாதங்களுக்கு குறைந்த காலத்தில் முதிர்ச்சியடைகின்ற ரூபா 200,000,000 தொகையான நிலையான வைப்பு நீண்ட கால நிதிச் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததன் காரணமாக அத்திகதியில் உள்ளவறான காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளின் பெறுமதி அத்தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் காலப்பகுதிக்கு இணங்க முதலீட்டினை குறுங்காலம் மற்றும் நீண்ட காலமாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக குறித்துக் கொள்கிறேன். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் 41 ஆம் பந்தியின் பிரகாரம் மதிப்பீட்டின் மாற்றத்தின் தாக்கத்தினை மாற்றம் ஏற்பட்ட காலப்பகுதிக்கும் எதிர்வரும் காலப்பகுதிக்கும் தாக்கம் ஏற்படும் வகையில் செம்மையாக்கப்பட வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டிற்கான மிகைவரி ஒதுக்கீடு ரூபா 23,997,934 தொகையானது நடைமுறையாண்டிற்கான வரிச் செலவுக்கு செம்மையாக்கப்படாது திரண்ட நிதித்திற்கு செம்மையாக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு குறித்துக் கொள்கிறேன். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களுக்காக வினைத்திறனான ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாததன் காரணமாக சொத்துக்கள் வகுப்பு 3 இன் ரூபா 1,104,971 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் மதிப்பீடு செய்யப்பட்ட தவறினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்தம் செய்து நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களை மீள் மதிப்புச் செய்யும் குழுவின் அறிக்கை 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிதியத்திற்கு கிடைக்காமையின் காரணமாக இதனை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க முடியாதுள்ளது. 2023 அம் ஆண்டின் போது மீள் மதிப்பு அறிக்கையினை பெற்று உரிய செம்மையாக்கலினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்பு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளிலிருந்து காணப்படுகின்ற ரூபா 11,963,430 தொகையான வருமான வரி மிகை ஒதுக்கீட்டினை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்காமையால் செலுத்த வேண்டிய வருமான வரிப் பொறுப்பு அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இந்த மீதியினை விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய வரி கொடுப்பனவுகளுக்காக பதிவு செய்வதற்கு முன்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட மீதியாவதுடன் இந்த மீதியை கணக்குகளின் ஊடாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியான வரிப் பொறுப்பு வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களாக காட்டப்பட்டுள்ள ரூபா 7,241,656 தொகையான சேமிப்புக் கணக்கின் மீதியானது உண்மையிலேயே காணப்படாத ஒரு மீதி என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 2002 ஆம் ஆண்டின் போது சுழற்ச்சி நிதியத்தையும் கமத்தொழில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தையும் ஒருங்கிணைப்புச் செய்யும் போது விவசாயிகள் நம்மைக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட இந்த மீதியானது புத்தகப் பெறுமதி மாத்திரமாகும். இது சம்பந்தமாக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. | வங்கி மீதி தொடர்பாக பரீட்சிப்பு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களுள் முன்னைய ஆண்டுகளிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 1,193,727 தொகையான ஏனைய பெறவேண்டிய வட்டி மீதி, ரூபா 18,247,914 தொகையான குறுங்கால கடன் மீதி, நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை உருவாக்கும் போது பொறுப்பேற்கப்பட்ட ரூபா 9,112,579 தொகையான நீண்டகால கடன் மீதி என்பன காணப்படாத அல்லது அறவீடு செய்யும் இயலுமை இல்லாத மீதி என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ரூபா 1,193,727 மீதியினை ஏடுகளிலிருந்து நீக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் ரூபா 18,247,914 மீதியில்<br>• ரூபா 1,424,521 மீதியினை கமநல நீதிபதிகள் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.<br>• ரூபா 8,623,393 மொத்தத் தொகையான இரண்டு மீதிகளுக்காக பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க ஒரு குழுவினை நியமித்து மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன.<br>• ரூபா 8,200,000 மீதி தொடர்பாக 3 கம்பனிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br><br>ரூபா 9,112,579 மீதிக்காக ஒரு குழுவினை நியமித்து அதன் சிபாரிசின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | அறவிட முடியாத கடன் மீதிகளின் முழுப் பெறுமதிக்குமாக நிதிக்கூற்றுக்களில் ஐயக் கடனுக்காக ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன என்று கணக்கீட்டு கொள்கைகளில் காட்டப்பட்டிருந்தும் அதற்கு முரணாக கொவி செத லொத்தர் வருமானத்திலிருந்து நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வருமானமாக பொதுத் திறைசேரிக்கு செலவு வைக்கப்பட்டுள்ள வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2016 ஆம் ஆண்டிலிருந்து உண்மையாக நிதியத்திற்கு கிடைத்த வருமானம் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டு கிடைக்க வேண்டிய பணம் ஒரு குறிப்பின் மூலம் மாத்திரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்கான ரூபா 14,171,883 தொகையான திறைசேரி உண்டியல் வட்டி வருமானமானது நிதிக்கூற்றுக்களில் ரூபா 12,953,578 ஆக குறிப்பிடப்பட்டதனால் மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,218,305 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான திறைசேரி உண்டியல்களை நிதிக்கூற்றுக்களில் காட்டும் போது முதலீட்டின் தொடக்க நிதியின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டது. முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிறிகுமிடையே திறைசேரி உண்டியல்களின் முதலீட்டு பெறுமதிக்கிடையிலான வித்தியாசம் ஆண்டின் இறுதியில் நாட்குறிப்பு பதிவின் மூலம் செம்மையாக்கப்பட்டுள்ளது. கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் எதிர் காலத்தில் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கு குறித்துக் கொள்கிறேன். | கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் வட்டி வருமானத்தை கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட முன்னைய ஆண்டிற்கான திறைசேரி உண்டியல் வட்டி வருமானம் ரூபா 2,343,543 ஆல் அதிகரித்து பதியப்பட்ட தவறினை சரி செய்யும் போது ரூபா 1,125,192 இற்காக மாத்திரம் செம்மையாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் இன்னும் ரூபா 1,218,351 செம்மையாக்கப்பட்டிருக்கவில் லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய திசைசேரி உண்டியல் வட்டி மீதி அதிகரித்து பதியப்பட்ட தவறினை சரிசெய்வதற்காக கிடைக்க வேண்டிய திறைசேரி உண்டியல்களின் பெறுமதியான ரூபா 1,125,192 தொகை முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல் கணக்கிற்கு செம்மையாக்கப்பட்டுள்ளது. இச் செம்மையாக்கலின் மூலம் 2022 ஆம் ஆண்டிற்கான இறுதி மீதி சரியாக வெளிக்காட்டப்படுவதுடன் எதிர்காலத்தில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் ஒப்பீட்டு ரீதியான நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களுள் மற்றும் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்காக மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 6,029,902 தொகையான செலவு வவுச்சர்களை முன்னைய ஆண்டிற்கான செலவுகளாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டதனால் மீளாய்வண்டிற்கான இலாபம் ரூபா 6,029,902 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட முற்பணம் உரிய ஆண்டிலேயே முற்பணமாக கணக்கீடு செய்யப்பட்டதுடன் முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கலாக செம்மையாக்கப்படும். | முற்பணம் தீர்த்துவைக்கப்பட்ட காலப்பகுதிக்குரிய செலவுகளை இனங்காண்தல் வேண்டும். |
| (ஏ) | 2020 ஆம் ஆண்டிற்கான வருமானம் ரூபா 229,069 ஆனது 2021 ஆம் ஆண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்ட தவறினை சரி செய்வதற்காக 2022 ஆம் ஆண்டின் போது செம்மையாக்கப்பட வேண்டியதல்லாத போதிலும் அது திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டு பிழையாக 2022 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டிய இறுங்கு கடன் வட்டி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான இறுங்கு கடன் வட்டி வருமானத்தை கணக்கீடு செய்தலினை சரி செய்யும் போது கிடைக்க வேண்டிய வருமானக் கணக்கிலிருந்து கழிக்கப்பட்ட தவறினை இந்த ஆண்டின் போது சரி செய்வேன். | கணக்கீட்டுத் தவறினை சரிசெய்தல் வேண்டும். |
| (ஐ) | முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல் கணக்கிலிருந்து ரூபா 16,555,081 செலவு மீதியினை திரண்ட நிதியத்திற்கு ஆரம்ப மீதியுடன் சேர்த்து காட்டுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான மிகையுடன் சேர்த்து நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் I இன் பிரகாரம் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்களைக் காட்டும் போது முன்னைய ஆண்டிற்கான திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்குவதற்கு குறித்துக்கொள்கிறேன். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கப்படுதல் வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டின் சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான திரண்ட நிதியத்தின் மீதியானது உரிய பேரேட்டுக் கணக்கில் ரூபா 1,457,360,303 ஆகவும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் ரூபா 1,425,935,517 ஆகவும் காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 31,424,786 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் உரிய தவறினையும் பிழைகளையும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வித்தியாசத்தை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | விவசாய சக்தி கடன் திட்டத்தின் வட்டி வருமானம் தொடர்பாக பேரேட்டுக் கணக்கு தயாரிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் உரிய தவறினையும் பிழைகளையும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பேரேட்டுக் கணக்கு தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.4 கணக்கிணக்கங்கள் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| கொவிசெத லொத்தர் வருமானம் | 5,411,697,993 | 5,400,175,527 | 11,522,466 | உரிய வித்தியாசத்தினை பொதுத் திறைசேரியிடமும் தேசிய லொத்தர் சபையிடமும் விசாரித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வித்தியாசத்தை இனங்கண்டு சரி செய்தல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | விவசாயிகளின் வைப்பு | 697,644 | விபரமான துணைப்பதிவேடுகளும் மீதிகளின் உறுதிப்படுத்தல்களும் | நிதிக்கூற்று அறிக்கையில் புத்தகப் பெறுமதி மாத்திரம் உள்ளது. விபரமான துணைப்பதிவேடுகள் இல்லை. மீதியை உறுதிப்படுத்துவதற்கு உரிய தரப்பினர் இல்லை. | தாமதமின்றி மீதிகளை உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | பங்கு கணக்கின் மீதி | 591,965 | பங்குச் சான்றிதழ் | நிதிக்கூற்று அறிக்கையில் புத்தகப் பெறுமதி மாத்திரம் உள்ளது. விபரமான துணைப் பதிவேடு இல்லை. மீதிகளின் உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளுவதற்கு உரிய தரப்பினர் இல்லை. | தாமதமின்றி மீதிகளை உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | கொவிசெத நிதியத்தின் மீதி | 159,399,408 | விபரமான துணைப்பதிவேடும் மீதியின் உறுதிப்படுத்தலும். | நிதிக்கூற்று அறிக்கையில் புத்தகப் பெறுமதி மாத்திரம் உள்ளது. விபரமான துணைப் பதிவேடு இல்லை. மீதிகளின் உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளுவதற்கு உரிய தரப்பினர் இல்லை. | தாமதமின்றி மீதிகளை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங் நிதி சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தி | நிதி ஒழுக்கத்தினைப் பேணுவதற்காக ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தின் அங்கீகரிக்கப்படாத பாதீட்டிற்குப் புறம்பான வருமானங்களை சேகரித்தல் மற்றும் செலவு செய்தல் அங்கீகரிக்கப்படாதிருக்க வேண்டிய போதிலும் 1994 மார்ச் 09 ஆந் திகதிய விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்த நிதியம் பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி இந்த அறிக்கைத் திகதி வரையும் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. | விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் வரைபு சம்பந்தமாக டேமலதிக நடவடிக்கை எடுப்பதற்காக அமைச்சின் சட்டப்பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அது சம்பந்தமான மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அதிகாரச் சட்டத்தினை துரிதமாக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு | ஒரு உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது விவசாய அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளரினால் கணக்காய்விற்கு உட்படுத்தப்படுகிறது. அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவு நிதியத்தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். | உள்ளகக் கணக்காய்வளர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | 1994 மார்ச் 9 ஆம் திகதிய விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 14 ஆம் பிரிவு | நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக பதவியினர்களைச் சேர்த்துக்கொள்ளும் நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகார சட்டத்தின் வரைபு சம்பந்தமான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சின் சட்டப்பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. உரிய அதிகாரச சட்டத்தின் வரைபு அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அச்சேர்ப்பு நடைமுறையினைத் தயாரித்து அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பதவியணியினர்களைச் சேர்த்துக்கொள்ளும் நடைமுறையானது அங்கீகரித்துக்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 48,833,512 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 74,034,655 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 25,201,143 குறைவு அவதானிக்கப்பட்டது. இக்குறைவிற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது பொதுத்திறைசேரியிடமிந்து கொவிசெத லொத்தர் வருமானம் கிடைக்காமை பிரதான காரணமாக இருந்தது. மீளாய்வாண்டிற்கான இலாபம் குறைவடைந்திருந்தும் வட்டி வருமானத்தில் ரூபா 47,547,192 அதிகரிப்பு அதாவது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சதவீதமாக 141 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மக்கள் வங்கியில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டு 2022 யூன் 09 ஆந் திகதி முதிர்ச்சியடைந்த ரூபா 125,000,000 தொகையான முதலீட்டினை மீள் முதலீடு செய்வதற்கு 7 நாட்கள் தாமதித்ததன் காரணமாக அத்திகதியில் காணப்பட்ட 23.25 சதவீதமான வருடாந்த வட்டி வீதத்தின் அடிப்படையில் ரூபா 557,363 வட்டிப் பணம் இழக்கப்பட்டிருந்தது. | முதலீடுகள் முதிர்ச்சியடைகின்ற திகதி மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களுடன் தவிர்க்க முடியாத சில காரணங்களின் அடிப்படையில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் தாமதமின்றி முதலீட்டினை மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்கிறேன். | மிகை நிதிகளை தாமதமின்றி முதலீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2002 இலிருந்து 2004 வரையான 09 சந்தர்ப்பங்களின் போது தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கு மொத்தமாக ரூபா 102,662,700 கடன் வழங்கப்பட்டு அக்கடன் பணத்தில் ரூபா 9,000,000 ஒரு ஆண்டு காலத்திற்குள் தீர்த்து வைப்பதற்கும் ரூபா 93,662,700 இனை கண்டியில் அமைந்துள்ள மஹபேரிதென்ன தோட்டம் என்ற பெயருள்ள காணியை விற்பனை செய்த உடன் தீர்த்து வைப்பதற்கும் உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கிக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் இணங்கிக் கொண்ட சந்தர்ப்பத்தில் வெளித்தரப்பினர்களுக்கு காணி 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் வழங்கி 20 ஆண்டுகள் கடந்திருந்தும் தீர்த்து வைக்கப்படாத கடன் மீதி ரூபா 55,512,700 மற்றும் அதற்காக சேர்ந்து நின்ற வட்டி ரூபா 98,023,448 ஆகும். | தற்பொழுது ரூபா 500,000 வீதம் மாதாந்த தவணைப் பணம் தொடர்ச்சியாக அறவிடப்படுகின்றது. இது சம்பந்தமாக 2023 மார்ச் 17 ஆம் திகதி நடைபெற்ற விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு உட்பட்டதுடன் அதன் போது மாதாந்த தவணைப் பணம் ரூபா 1 மில்லியன் வீதம் செலுத்தி முடிவுறுத்துமாறு உரிய நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. | தீர்த்துவைக்கப்பட ாத கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2016 ஆம் ஆண்டின் போது 24 மாதங்களுக்குள் அறவீடு செய்வதற்கு இணங்கிக் கொண்டு ரூபா 1,000,000 பணம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் அங்கீகரிக்கப்பட்டு அதில் ரூபா 500,000 பணம் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கைக்காக நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள வலப்பன கிராமத்திலுள்ள ஒரு விவசாயிக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அந்த மாகாணத்திற்குப் பொறுப்பான கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரால் செயற்திட்டம் வெற்றிகரமாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை என அறிவிக்கப்பட்டிருந்ததன் காரணமாக மிகுதிப் பணம் விடுவிக்கப்பட்டிருக்காததுடன் 6 ஆண்டுகள் கடந்திருந்தும் கடன் பணமும் வட்டியும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது விவசாய வங்கியினூடாக வழங்கப்பட்ட ஒரு கடனாகும். கமநல நீதிபதிகள் சபையினால் வழக்கு தொடுக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | இணங்கிக் கொண்டவாறு பணத்தை அறவீடு செய்வதற்க்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இறுங்குப் பயிர்ச் செய்கை மேற்கொள்கின்ற விவசாயிகளுக்கு வழங்குவதற்காக 2020 ஆம் ஆண்டின் போது கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 200,000,000 கடன் பணத்திற்காக ரூபா 1,655,819 கிடைக்க வேண்டிய வட்டியாக சேர்ந்து வந்திருந்த போதிலும் இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய கடன் மீதியையும் வட்டிப் பணத்தையும் அறவீடு செய்வதற்கு கமநல சேவைகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. | தவணைப் பணத்துடன் வட்டிப் பணத்தையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | தொடர்ச்சியாக கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு பொலன்னறுவை மாவட்டம் முழுவதும் பரவியுள்ள 3,000 ஏக்கர்களில் Global Gap சான்றுபடுத்திய நடைமுறைக்கு இணங்க 2018/2019 இல் பயிர்ச் செய்கை மேற்கொள்ளல், சர்வதேச நியமப்படுத்தப்பட்ட நடைமுறை தொடரபாக விவசாயிகளுக்கு தெரியப்படுத்துதல் மற்றும் சுற்றாடலுக்குச் சாதகமான நிலைபேறான விவசாய நடைமுறைகளைப் பின்பற்றி பொருளாதார நலன்களைப் பெற்றுக்கொள்வதினை குறிக்கோளாகக் கொண்டு அமைக்கப்பட்ட ரண்கெவிலிய சமூக தொழில் முயற்சி பொதுக் கம்பனிக்கு ஒரு ஆண்டு காலத்தில் செலுத்தும் அடிப்படையில் ரூபா 5,966,000 வட்டியில்லாத கடன் வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்ட கால அட்டவணையின் பிரகாரம் 2019 மார்ச் மாதமளவில் விவசாயிகளின் நெல் உற்பத்திக்காக GAP (Good Agriculture Practice) சான்றிதழினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் உரிய சான்றிதழினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் வழங்கிய கடன் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக தொடர்ச்சியாக தெரியப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீண்டும் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் 2023-03-17 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது இது சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தப்பட்டது. உரிய சட்டரீதியான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு சட்டப் பிரிவிற்கு தற்பொழுது அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | திட்டத்தின் பிரகாரம் GAP சான்றிதழினை வழங்கி கடன் பணத்தினை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட அலுவலகம் மற்றும் விவசாய கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள குறுங்கால கடன் மீதிக்கு மத்தியில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5 ஆண்டுகளிலிருந்து 22 ஆண்டுகள் வரையான காலப்பகுதி எடுத்திருந்த ரூபா 27,360,493 தொகையான கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | • ரூபா 1,424,521 மீதி இனை கமத்தொழில் நீதிச் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.<br>• ரூபா 8,623,393 கூட்டு மொத்தமான இரண்டு மீதிகளுக்காக பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க ஒரு குழு நியமிக்கப்பட்டு மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br>• ரூபா 8,200,000 மீதி தொடர்பாக 3 கம்பனிகளுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br>• ரூபா 9,112,579 மீதிக்காக பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கு இணங்க ஒரு குழு நியமிக்கப்பட்டு மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | உத்தேச நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 2002 ஆம் ஆண்டின் போது சுழற்சி நிதியத்தினையும் கமத்தொழில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தையும் ஒன்றிணைத்து விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவிக்கும் போது அந்த இரண்டு நிதியங்களில் காணப்பட்ட வரவு மற்றும் செலவு கடன் மீதிகள் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்டன. அதன் போது நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட சுழற்சி நிதியத்தில் ரூபா 44,255,850 குறுங்கால கடன் மீதியினை அறவீடு செய்வதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,490,000 படியினைச் செலுத்தி 10 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் இன்னும் 2019 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்படாத கடன் ரூபா 39,909,275 தொகை நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டது. | சுழற்சி நிதியத்தின் கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் வழங்கிய அறிக்கைகளில் குறிப்பிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ரூபா 44,255,850 ஆகக் காணப்பட்ட மீதி ரூபா 39,909,275 வரை குறைக்கப்பட்டுள்ளது. எனினும் எஞ்சியுள்ள மீதி சம்பந்தமாக ஒரு குழுவினை நியமித்து தீர்த்து வைக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | கடன் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | ஒரு தனியார் கம்பனிக்கு 2003 ஆம் ஆண்டின் போது வழங்கியுள்ள ரூபா 3,500,000 கடன் பணத்தில் ரூபா 860,000 மற்றும் அட்டுறு வட்டிப் பெறுமதி ரூபா 676,666 இன்னும் அறவீடு செய்ய வேண்டியிருந்தது. இக்கம்பனியின் வியாபார நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது எனவும் கடனைப் பெற்றுக்கொண்ட நபர் மரணமடைந்துள்ளார் எனவும் நிதியத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதனால் இன்னும் கடனை அறவீடு செய்யும் இயலுமை தொடர்பாக நியாயமான பரீட்சிப்பினை மேற்கொண்டு அறவீடு செய்வதற்கு அல்லது தேவையான சட்டரீதியான | இது சம்பந்தமாக விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் 2023-03-17 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டதுடன் அதன் போது சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் விசாரித்துப் பார்ப்பதற்கு சட்டப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுப்பதற்கு இன்றுவரை முயற்சி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | பெரிய வெங்காய விதைகளை உற்பத்தி செய்கின்ற 63 விவசாயிகளுக்கு 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 11,370,000 கடன் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாத மீதி ரூபா 2,957,120 ஆக இருந்ததுடன் இணங்கிக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் கடனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது மாத்தளை மாவட்டத்திற்கு விவசாய வங்கியினூடாக வழங்கப்பட்டுள்ள கடனாகும். விசாயிகளிடமிருந்து பணத்தை அறவீடு செய்வதிலுள்ள தாமதத்தின் காரணமாக இது இன்னும் அறவிடப்பட்டு வருகின்றது. தற்பொழுது ரூபா 2,623,265 மீதி காணப்படுகின்றது. | இணங்கிக் கொள்ளப்பட்ட வாறு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வெண்டும். |
| (ஊ) | ஒரு ஆண்டிற்குள் அறவீடு செய்யும் நிபந்தனையின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்தில் இறுங்கு பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் 10,000 விவசாயிகளுக்கு வழங்குவதற்காக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு ரூபா 90,000,000 தொகை 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 7 ஆண்டுகள் கடந்திருந்தும் ரூபா 16,541,332 மீதி அறவீடு செய்ய வேண்டி இருந்தது. | இதுவும் அனுராதபுர மாவட்டத்திற்கு விவசாய வங்கியினூடாக வழங்கப்பட்டுள்ள கடனாகும். விவசாயிகளிடமிருந்து பணத்தை அறவீடு செய்வதிலுள்ள தாமதத்தின் காரணமாக இது இன்னும் அறவிட வேண்டியிருந்தது. தற்பொழுது ரூபா 16,541,332 மீதி காணப்படுகின்றது. | இணங்கிக் கொள்ளப்பட்ட வாறு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவிக்கும் பிரதான குறிக்கோளினை அமுல்ப்படுத்துவதற்கு பணத்தை பயன்படுத்தாது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பணம் தொடர்ச்சியாக நிலையான வைப்புக்களிலும் திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிலையான வைப்புக்களில் ரூபா 465,000,000 தொகையும் திறைசேரி உண்டியல்களில் ரூபா 90,420,510 தொகையும் அவ்வாறு முதலீடு செய்யப்பட்டு ரூபா 72,762,442 வட்டி வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட பாதகமான பொருளாதார நிலைமையின் காரணமாக புதிய செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தாமைக்கு விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதன்படி செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிதியத்தின் பணத்தை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்து வட்டி வருமானம் உழைக்கப்பட்டிருந்தும் அப்பணத்தை மீண்டும் நிதியத்தின் அபிவிருத்தி மற்றும் கடன் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஈடுபடுத்துதல் இடம்பெறுகின்றது. 2023 ஆம் ஆண்டின் போது அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | நிதியத்தைத் தோற்றுவிக்கும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பம் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நி.பி 877(2) (உ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையானது நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இன்றுவரை அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட வேண்டியிருந்த பேதிலும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது கமத்தொழில் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளரால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. | ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்படுதல் வேண்டும். |